செ. கு. எண்: 230 நாள் :27.08.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 27.8.2013

கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மெட்ரோ மின்பகிர்மான பிரிவில் மின்பாதை ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.முருகேசன் அவர்கள் 8.6.2012 அன்று காங்கேயம்பாளையம் கிராமத்தில் மின்மாற்றியில் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், முல்லை நகர் பிரிவில் மஸ்தூராக பணி புரிந்து வந்த செங்கல்பட்டு வட்டம், வண்டலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. S.ஸ்டாலின் என்பவர் 23.6.2013 அன்று தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலை மேம்பாலத்தின் கீழ் பகுதியிலுள்ள மின்மாற்றியில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கி பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், அனகாபுத்தூர் பிரிவில் களப் பணியாளராகப் (Field Assistant) பணி புரிந்து வந்த திரு. A.சுப்பிரமணி என்பவர் 11.7.2013 அன்று, அனகாபுத்தூர், வெங்கடேஸ்வரா நகரில் மின்கம்பத்தில் ஏறி மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், செங்கல்பட்டு நகர மின்வாரிய பிரிவில் கம்பியாளராகப் பணி புரிந்து வந்த திரு. பசுபதி அவர்கள் 15.7.2013 அன்று மின்மாற்றியில் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மஸ்தூராகப் பணி புரிந்து வந்த கருப்பிலாக்கட்டளை மஜரா கல்லக்குடி கிராமத்தைச்

சேர்ந்த திரு. ராமகிருஷ்ணன் அவர்கள் 17.7.2013 அன்று சாத்துமங்கலம் மஜரா வண்ணம்புத்தூர் கிராமத்தில் உயர்மின் அழுத்த பாதையில் ஏற்பட்ட மின்சார பழுதை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், புஞ்சை புகளூர் தெற்கு கிராமத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்தில் மின்வினைஞராக பணி புரிந்து வந்த திரு. வெங்கடேசன் அவர்கள் 29.7.2013 அன்று ஆலையில் மின் பராமரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி மயக்கமடைந்து, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், உடுமலைப்பேட்டை மின்வாரிய பிரிவில் தினக்கூலி பணியாளராகப் பணி புரிந்து வந்த திரு. முத்துக்குமார் அவர்கள் 2.8.2013 அன்று சின்னவாளவாடி கிராமத்தில் தெருவிளக்கு பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9